விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 15 சனிக்கிழமை (30.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 11

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## வெருகல் இந்து ஆலயம் மீது தாக்குதல் அகில இலங்கை இந்துமாமன்றம் கண்டனம்

(திருகோணமலை)

திருகோணமலை ஈச்சிலம்பற்றில் வெருகல் முருகன் கோவில் மீது விமானப் படையால் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு அகில இலங்கை இந்துமாமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அவ் அமைப்பு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

திருகோணமலை மாவட்டத்தில் ஈச்சிலம்பற்றில் வெருகல் முருகன் கோவில் மீது இலங்கை விமானப் படை வியாழன் காலை குண்டு வீச்சு நடத்தியிருக்கின்றது.

கோவில் கட்டடங்கள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. இச் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-15 பாதையைத் திறக்கக் கோரி வாகரையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

வாகரையில் பொதுமக்கள் அமைப்புக்களினால் நேற்றுக் காலை 10.30 மணியளவில் ஆர்ப்பாட்டம்ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஏ-15 வீதி பொதுமக்களின் பாவனைக்காகத் திறக்கப்பட வேண்டும். வாகரைக்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்பட வேண்டும். மற்றும் பொதுமக்கள் மீதான ஷெல் தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் வாகரை வெகுஜன ஒன்றியத்தின் தலைவரிடம் தமது கோரிக்கை குறித்த மகஜரும் கையளிக்கப்பட்டது.

இம் மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி, எதிர்க் கட்சித் தலைவர், (04 ஆம் பக்கம் பார்க்க)

# சம்பூர் அனல்மின் நிலையத்துக்கான ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்தானது

## அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

500 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் சம்பூரில் நிர்மாணிக்கப்படவுள்ள அனல்மின் நிலையத்துக்கான ஒப்பந்தம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது.

இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள இவ் அனல்மின் நிலையத்துக்கான ஒப்பந்தத்தில் இந்திய என்.டி.பி.சி. கம்பனியின் சார்பில் அதன் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ரி.சுந்தரலிங்கமும் இலங்கை எரிபொருள் அமைச்சின் செயலாளர் எம்.என்.பேடினான்டோ, இலங்கை மின்சார சபைத் தலைவர் பெரேரா ஆகியோர் இதில் கைச்சாத்திட்டனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் ஊரடங்கு தளர்வு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் நேற்று முழுநாளும் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தினால் அப் பகுதியில்இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டன.

பிற இடங்களிலிருந்து சென்ற அரச ஊழியர்கள் நுணாவில் பகுதியுடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

போக்குவரத்துக்களும் நுணாவில் பகுதி மட்டுமே மேற்கொள்ளப்பட்டன. இன்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

## எம்.பியின் வீட்டில் புகுந்து அட்டகாசம்

உவர்மலை கீழ்கரை வீதியிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கத்தின் வீட்டிற்குச் சென்ற சிலர் அங்கு அவரை வெருட்டும் தொனியில் பேசியதுடன் அவரது வீட்டினை தாம் தமது கட்சியின் அலுவலகமாகவும் பாவிக்கப் போவதாகவும் எச்சரித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களுடன் அவர்கள் வாக்குவாதம் புரிந்துள் ளனர்.

இச் சம்பவம் குறித்து திருமலை உதவிப் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து அவர்கள் அங்கிருந்து அகற்றப் பட்டதாகவும் எம்.பியை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.(ஏ)

## கடத்தப்பட்ட புளொட் உறுப்பினர்கள் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டனர்

(புத்தளம்)

புத்தளத்தில் கடந்த 27 ஆம் திகதி கடத்தப்பட்ட புளொட் உறுப்பினர் இருவரும் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

குருநாகல் அநுராதபுரம் பிரதான வீதியில் மொதகம சியம்பலாகமுவ பாலத்திற்கு அருகில் அவர்களது சடலங்கள் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாமா என்றழைக்கப்படும் பாக்கியராஜா மற்றும் ஹரிகாலன் ஆகிய இருவருமே சடல மாக மீட்கப்பட்டதாகப் புளொட் அமைப்பினர் அடையாளம் காட்டியுள்ளனர்.

கைகள் கட்டப்பட்ட நிலையிலிருந்த இந்த சடலங்களை நேற்றுக் காலை கல்கமுவப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அன்று இவர்கள் இருவரையும் கடத்தியவர்கள் இராணுவத்தின் ஒரு பிரத்தியேகப் பிரிவு என்று அடையாளப்படுத்தி அடையாள அட்டையைக் காட்டிய பின்னரே அவர்களை வீட்டிற்குள் அனுமதித்ததாகப் புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

அவர்கள் அந்த வீட்டைச் சோதனையிட்ட விதம் அவர்கள் அங்கு நடத்து கொண்ட முறைகள்என்பவற்றினை அவதானித்துள்ள போது அந்த வீட்டிலிருந்தவர்களும் கூட இராணுவத்தினரே அங்கு வந்ததாக உறுதிப் படுத்தியதாக (04 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் நலன் கருதி அதிகாலையில் ஊரடங்கு தளர்வு

(யாழ்ப்பாணம்)

கப்பல் பயணிகளின் நலன்கருதி அதிகாலை 4 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்படும் என இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

ஊரடங்கு பிறப்பிக்கப்படும் நேரத்தில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி இரவு 8 மணி முதல் அதி காலை 4 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டது.

கப்பல் பயணிகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ் ஊரடங்கு நேரத்தில் இனிமேல் மாற்றம் இடம் பெறாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## டயலொக் சேவை நேற்றுமுதல் வழமைக்கு

(யாழ்ப்பாணம்)

டயலொக் தொலைபேசிச் சேவை நேற்று மாலை முதல் மீண்டும் செயற்படத் தொடங்கியது.

கடந்த திங்கட்கிழமை நாலு மாதங்களின் பின் செயற்படத் தொடங்கிய டயலொக் சேவை வலைப்பின்னலில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நேற்று முன்தினம் செயலிழந்தது.

இந்நிலையில் நேற்று மாலை மீண்டும் செயற்படத் தொடங்கியது. (ஏ)

## தொடர்ச்சியான மின்சாரம் வழங்க மூன்று ஜெனரேற்றர்கள் யாழ்.வந்தன

யாழ்.குடாநாட்டிற்கு 24 மணிநேர மின்சாரத்தைத் தடையின்றி வழங்குவதற்கு மூன்று மெகாவோட் உடைய ஜெனரேற்றர்கள் மூன்று கப்பலில் யாழ்.குடாநாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக ஒருங்கிணைப்பாளர் சந்திரபால லியனகே தெரிவித்தார்.

வலிகாமம் உட்பட குடாநாட்டின் பல பகுதிகளுக்கு தற்போதுள்ள ஜெனரேற்றர்களால் 24 மணிநேரமும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்பட முடியாதுள்ளதாக அண்மையில் யாழ்.பொது நூலகத்தில் நடைபெற்ற அரச உயர் மட்ட அதிகாரிகளின் மாநாட்டில் கோரிக்கை விடப்பட்டது.

இதனையடுத்து இம் மூன்று ஜெனரேற்றர்களும் அனுப்பி வைக்கப்படுவதாக சந்திரபால லியனகே மேலும் தெரிவித்தார். (ச-5)

## பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் வடக்கு மாகாண தற்காலிக ஆளுநர்?

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தின் ஆளுநராகப் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் மங்கள ரணராஜாவை தற்காலிகமாக நியமிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்குக் கிழக்கு மாகாண இணைப்பு சட்டவிரோதமானது என உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினையடுத்து வடக்குக் கிழக்கு தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுக் கிழக்குக்கு ஆளுநரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் வடக்கின் ஆளுநராக மங்கள ரணராஜாவை நியமிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. அவர் தற்காலிகமாகவே பணியாற்றவுள்ளார் என்றும் விரைவில் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்றும் கூறப்பட்டது. (ச-5)

# கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பிறப்பு இறப்புப் பதிவு ஆரம்பம்

கரவெட்டி பிரதேச செயலகத்தில் பிறப்பு இறப்பு, விவாகப் பதிவு சான்றிதழ்கள் வழங்கும் பணி ஜனவரி முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கரவெட்டி உடுப்பிட்டி பதிவாளர் பிரிவு, கரவெட்டி பதிவாளர் பிரிவிற்குரிய ஆவணங்களும் கட்டைவேலி பதிவாளர் பிரிவின் 01.07.1974இற்கு முற்பட்ட பதிவுகளுக்கான ஆவணங்களின் பிரதிகளும் இவ் அலுவலகத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளது.

மந்திகை அரசினர் வைத்திய சாலையில் இடம்பெற்ற பிறப்பு இறப்பிற்கான பதிவுகளும் 01.07.1974 இற்கு பிற்பட்ட கட்டைவேலி பதிவாளர் பிரிவு பதிவுகளுக்கான ஆவணங்களும் தொடர்ந்தும் பருத்தித்துறை மேலதிக மாவட்டப் பதிவாளர் காரியாலயத்தின் ஊடாகவே வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ச)

# மணிவாசகர் விழா

(காரைநகர்)

காரைநகர் மணிவாசகர் சபையின் ஆதரவில் நடைபெறும் மணிவாசகர் விழா நாளை பகல் ஒரு மணிக்கு ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து மூன்று நாட்கள் இடம்பெறும் இவ்விழாவை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆரம்பித்து வைப்பார்.

திருவாசகத் திருமுறை ஊர்வலம் சடையாளி ஞானவைரவர் கோவிலிலிருந்து ஆரம்பமாகும். திருவாசகத் திருமுறை சபை மு.சுந்தரலிங்கமும், வரவேற்புரையை காரைநகர் மணிவாசகர் பொருளாளர் நடராசா பாரதியும் நிகழ்த்துவர். தொடர்ந்து விழாவை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆரம்பித்து வைப்பார். சொற்பொழிவை 'திருவாசகத்தேன்' காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி ஜெயசீலன் நிகழ்த்துவார். (ச)

## சிக்கின்குனியா இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் லயன்ஸ் கழகத்தினால் நாளை சிக்கின்குனியாவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடாத்த தீர்மானித்துள்ளது. இதில் மாவட்ட வைத்திய அதிகாரி லயன் டாக்டர் நவமலர் கனகரத்தினம், யாழ்.போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி லயன் டாக்டர் கே.இட்டைசிங்கம், வைத்திய அதிகாரி லயன் டாக்டர் கே.சிவராஜா ஆகியோர் பங்கு கொண்டு சிகிச்சையளிக்கவுள்ளனர். இம் மருத்துவ முகாம் இணுவில் பொது நூலகத்தில் நாளை காலை 9மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெறும் (ச)

* * *

(யாழ்ப்பாணம்)

தீவக அரிமாக் கழகத்தினால் தம்பாட்டி நாரந்தனைக் கிராமத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 2.30 மணி வரையும் சிக்கின்குனியா இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இவ் மருத்துவ முகாமில் சிக்கின்குனியா இலவச மருத்துவப் பரிசோதனையும் மருந்து வழங்கலும் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெறும்.

இதில் வைத்திய கலாநிதி கே.ராஜரட்ணம் அவர்களின் தலைமையிலான குழுவினரால் சிக்கின்குனியா நோயாளர்கள் பரிசோதிக்கப்பட்டு மருந்தும் ஆலோசனையும் இலவசமாக வழங்கப்படவுள்ளது. (ச-9)

# அறக்கொடை விழா

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 82ஆவது பிறந்த நாள் அறநிதியத்தின் அறக்கொடை விழா எதிர் வரும் 7ஆம் திகதி ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான யாத்திரிகள் விடுதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் எண்பத்திரண்டாவது வயதை முன்னிட்டு அறநிதிய அறக்கொடை விழா நடைபெறவுள்ளது.இவ்விழாவின் போது முதியோர்களைக் கௌரவிக்கும் முகமாக நான்கு பெருமக்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். மேலும் அறநிதிய வட்டிப் பணத்தில் இருந்து வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள வறுமைக் கோட்டுக்கு கீழ் உயர் கல்வி கற்கும் திறமையான நூறு மாணவர்களுக்கு கல்வி நிதி வழங்கப்படவுள்ளது. (ச)

## ஸ்ரீ சத்திய சாயியின் சுயமுன்னேற்ற நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவன வடபிராந்திய இளைஞர் சபையினின் ஏற்பாட்டில் இடம்பெறும் சுயமுன்னேற்ற [illegible] நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.50 மணியளவில் பொன்.இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ச-9)

# சகலரும் ஒன்றிணைவதன் மூலமே சமாதானத்தை ஏற்படுத்தலாம்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



முரண்பாடுகளைக் களைந்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமாகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிறு சிறு விடயங்களுக்காக நாம் முரண்பட்டுக் கொண்டு பிரிந்திருந்தோமானால் இனப்பிரச்சினைக்கு என்றும் தீர்வு காண முடியாது என்பதுடன் அதிகாரப் பகிர்வின் ஊடாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எம்முடைய கொள்கையாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடக நலன் புரி சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்து உரையாற்றுகின்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த வைபவம் எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது; தற்பொழுது நடந்து கொண்டிருக்கின்றயுத்தத்தினை எதிர்கால சந்ததியினருக்கும் விட்டுச் செல்ல இடமளிக்கக் கூடாது.

அவர்களுக்கு யுத்தம் இல்லாத நாடொன்றை நாம் பரிசாக வழங்க வேண்டும் என்பதே எங்களுடைய பிரதான நோக்கமாகும். அதற்காக நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்தோம்.

ஆனால் சில கட்சிகள் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சில கொள்கைகளுக்காக முரண்பட்டுக் கொண்டு பிரிந்து நிற்கின்றன. இவ்வாறு பிரிந்து இருப்பதன் மூலமாக இனப்பிரச்சினைக்கு என்றுமே தீர்வுகாண முடியாது. யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் நாம் கூடிய கவனம் செலுத்தி வருகின்றோம். அதன் ஊடாகவே நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதுடன் நாட்டில் அமைதியையும் ஏற்படுத்த முடியும். (ச)

## முன்பள்ளி ஆரம்பவிழா

மானிப்பாய் மருதடி விநாயகர் சனசமூக நிலைய அரும்புகள் பாலர் முன்பள்ளி ஆரம்ப விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அரும்புகள் பாலர் முன்பள்ளி நிலையத் தலைவர் ஆ.வாஷிங்டன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சமாதான நீதிவானும் வேலணை பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளருமான செல்வராஜா ரமேஸ்சும் சிறப்பு விருந்தினராக மகாஜனக் கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி.அப்பாத்துரை சண்டிலிப்பாய் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி.காந்தராசா சந்திரவதனி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-9)

## ஜனவரி 4 ஆம் திகதி கல்வியியற் கல்லூரி ஆரம்பம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் புதிய கல்வியாண்டுக்கான கல்விச் செயற்பாடுகள் 2007ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள் அனைவரும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு விடுதிகளுக்கு சமுகமளிக்குமாறு உபபீடாதிபதி எஸ்.ஆர். சத்தியேந்திரம் பிள்ளை அறிவித்துள்ளார். (ச)

## பருத்தித்துறை தபாலதிபர் வவுனியாவுக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதம தபாலகத்தில் மேற்பார்வை உத்தியோகத்தராகவிருந்த ஐயம்பிள்ளை சின்னப்பு மன்னார் பிரதம தபாலக பிரதம தபாலதிபராக பதவியுயர்வு பெற்றுச் செல்கின்றார்.

மற்றும் பருத்தித்துறை தபால் நிலைய பொறுப்பதிகாரியாகவிருந்த ஏ.துரைசிங்கம் வவுனியா பிரதம தபாலக பிரதம தபாலதிபராக பதவியுயர்வு பெற்றுச் செல்கின்றார்.(ச-5)

## ஸ்ரீ ரமண பகவான் 128வது ஜயந்தி தினம்

பகவான் ஸ்ரீரமண மகரிஷிகளின் 128வது ஜயந்தி தினம் இன்று சனிக்கிழமை உடுவில் கிழக்கு - கடவுள் சந்நிதியில் ஜோதிட நூலாசிரியர் த.சத்தியதாஸன் தலைமையில் கொண்டாடப்படும்.அன்றைய தினம் காலை 7.00 மணிமுதல் திருவாசக முற்றோதலுடன் ஜயந்தி தின பூஜைகளும் ஆராதனைகளும் சொற்பொழிவுகளும் நடைபெறும். (ச)

# சந்தைக்குச் சென்ற இருவரை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை 5.45 மணியளவில் கொடிகாமம் சந்தைக்கு சென்ற தகப்பனும் மகனையும் காணவில்லையென யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை தெனியம்பையைச் சேர்ந்த சந்திரலிங்கம் விஜயகுமார் (வயது 32) மகன் பிரசாந் (வயது 13) என்ற இருவருமே சந்தைக்கு வானில் சென்றதாகவும் எனினும் சந்தைக்கும் செல்லவில்லை வீட்டிற்கும் திரும்பி வரவில்லையென அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


## 2 ஆயிரம் தபால் பொதிகள் கப்பலில் வருகிறது

திருகோணமலையிலிருந்து 2ஆயிரத்து 700 தபால் பொதிகள் கடற்படையினரால் சோதனையிடப்பட்டு கப்பலில் ஏற்றப்பட்டுள்ளதாக யாழ்.தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பொதிகளில் வெளிமாவட்டங்களிலிருந்து யாழ்.மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட உணவுப் பொருள்கள் அடங்கிய பொருள்களும் உள்ளடங்குவதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ச-5)

## 400 பயணிகளுடன் இன்று கப்பல் புறப்படும்

வெளி மாவட்டத்தில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சபரிமலை ஐயப்பன் பக்தர்கள் உள்ளிட்ட 400 பயணிகளுடன் காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு இன்று கப்பல் புறப்படவுள்ளது. யாழ்.மாவட்ட செயலகத்தில் பதிவு செய்த வெளி மாவட்ட அரச ஊழியர்கள் மற்றும் சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு செல்லும் 100 பக்தர்கள் அடங்கலாக 400 பேர் இக்கப்பலில் பயணிக்கவுள்ளனர். (ச-5)



நல்லூர் சிவன் கோவிலில் அண்மையில் நடைபெற்ற 'திருவாசகத்தேன்' நூல் வெளியீட்டின் போது 'வலம்புரி' நாளிதழ் நிர்வாக இயக்குநர் சி.வெற்றிவேலாயுதம், சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரனிடமிருந்து சிறப்புப் பிரதி ஒன்றைப் பெற்றவேளை எடுக்கப்பட்ட படம் இது.

சிறுவிளம்பரம்

திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், கமரா வகைகள், எலக்ரோனிக் பிளாஸ்டிக் கண்ணாடி திருத்துதல் முதலிய வேலைகள் திறம்படச் செய்து கொடுக்கப்படும். *சு.நாராயணசாமி*, கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில் (மேல்மாடி) யாழ்ப்பாணம். (709)

போர் நடத்துவதில் பெருமையில்லை. பூசல் அகன்று மனமொத்த சமரசம் செய்வதில்தான் பெருமை.
—டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

# இந்து மதத்தை இழிவு செய்யும் நடவடிக்கைகள் வேண்டாம்

சிவபூமி என்று போற்றப்பட்ட ஈழத்தில் இந்து மத நிந்தனை தாராளமாக நடைபெறுகின்றது. மத மாற்றம் முதற்கொண்டு இந்து மத நிகழ்வுகளை கொச்சைப்படுத்தும் செயல்கள் வரை எல்லாமுமே மலிவாகி விட்டன.

இந்து மத அமைப்புகளின் பலவீனமும் 'எல்லாம் சிவன்' என்ற பற்றற்ற நிலையுமே சிவபூமி என்று போற்றப்பட்ட ஈழத்தில் இந்துமதம் இழிவு செய்யப்படுவதற்கான காரணமாகும். இந் நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

இப்போது இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் விடுதலைப் போராட்டத்திற்கு மேலாக, மிக விரைவில் மதப் போர் வெடிக்கும் சூழ்நிலை உருவாகி வருகின்றது.

இது பற்றி பல தடவைகள் இப்பகுதியில் சுட்டிக் காட்டியுள்ளோம். இப்போதும் அதையே மிக வலியுறுத்த வேண்டியதாகவுள்ளது.

இவ்விதம் மீள வலியுறுத்துவது மதப் போரைத் தடுப்பதற்காகவேயன்றி அதன் வேகத்தைத் துரிதப்படுத்துவதற்காக அல்ல என்பதை உரியவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதற்கு இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் விடுதலைப் போராட்டம் நல்லதோர் உதாரணமாகும்.

அதாவது, தமிழ் மக்கள் உரிமையோடு வாழ்வதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தித் தருமாறு தமிழ்த் தலைவர்கள் இலங்கை ஆட்சியாளர்களிடம் பல தடவைகள் கோரினர்.

இதற்காக, உண்ணாவிரதம், அகிம்சைவழிப் போராட்டம் எனப் பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

இவற்றுக்கெல்லாம்இலங்கை அரசு வழங்கிய வெகுமதிதான் என்ன? அகிம்சை வழிப் போராட்டம் நடத்திய தமிழ்த் தலைவர்களை பொலிஸார் அடித்தனர், உதைத்தனர், சிறையில் அடைத்தனர். இதன் விளைவுதான் இன்றைய விடுதலைப் போராட்டம்.

தந்தை செல்வநாயகம் அவர்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் தெளிவாகக் கூறியிருந்தார். 'நாங்கள் எமது உரிமைக்காக அகிம்சைவழிப் போராட்டம் நடத்தினோம். அதனை நீங்கள் அவமதித்தீர்கள். ஆனால் எமது இளைஞர்கள் ஆயுதங்களோடு வருவார்கள். அப்போது நீங்கள் அவர்களுக்குப் பதிலளித்தாக வேண்டும்' என்று தந்தை செல்வநாயகம் கூறிய கருத்து இன்று அமுலாகியுள்ளது.

இதேபோன்று இந்து மதத்திலும் இளம் ஆறுமுக நாவலர்கள் நிச்சயம் பிறப்பார்கள். அவர்கள் பழைய ஆறுமுகநாவலர் போன்று திருநீறும், உருத்திராட்சமும் அணிந்திருக்கமாட்டார்கள்.

அவர்களின் கழுத்தில் ஆயுதம் தொங்கும். அகிம்சை இருக்கமாட்டாது. அழிப்பு நடவடிக்கையேயிருக்கும். இந்த உண்மையை மதம் மாற்றுபவர்கள்முதல் இந்து மதத்தை நிந்தனை செய்பவர்கள் வரை உணர்ந்து கொள்ள வேண்டும்.

நத்தார் பண்டிகைக்கு நீக்கப்பட்ட ஊரடங்கை மார்கழி மாத திருவெம்பாக் காலத்தில் நீக்காதது ஏன்? அதிகாலையில் நீராடி வீதிதோறும் சங்கு ஒலித்துத் திருப்பள்ளி எழுச்சிப் பாடும் இந்து மத நடைமுறை தெரியாததாலா? அல்லது இந்து மதத்திற்கு வந்தனம் செய்ய வேண்டிய தேவை இல்லை என்ற உணர்வினாலா? என்பது உரியவர்களால் தெளிவுபடுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

# யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர்கள் 81 பேருக்கு மகா பொல

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் 2006ஆம் ஆண்டில் முதலாம் வருடத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்களில் 81பேருக்கு மகாபொல புலமைப்பரிசில் கிடைக்கப் பெற்றுள்ளது.

மகாபொல கிடைக்கப்பெற்ற மாணவர்களை உடனடியாக அலுவலகத்திற்கு சமூகமளித்து உரிய விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு நிறுவனப் பணிப்பாளர் வே.கருணாநிதி கேட்டுள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு;

**எச்.என்.டி.எ**

எஸ்.அமிர்தரஞ்சினி ,கெ.குணபாலசிங்கம்,ந.மோகனா, ஜீ.பிரியந்தி, க.மேகலா, ரா.சுபாஸ்கரன், செ.நிர்மலா, ந.தயாநிதி, க.கவிதா, க.ரோகினிதேவி, சி.ஜெயாலினி, வி.லிங்கரூபன், எ.நவஜீவன், சி.தனுசியா, பூ.சுமதிலா, ம.மதுரா, வ.நிருபன், மு.வாசுகி, ஆர்.முருகானந்தசர்மா, பா.மீரா, க.பிரதீபா, இ.சனந்தனா, ச.கஜினி, தி.நிஷங்கன், த.கஜிதிரா, பெ.சாலினி, ச.மேனகா, ச.நிருஜா, ரி.சுதாகர், வி.திருலோகசிங்கம், இ.லுக்சிகா, ச.மைதிலி, ந.குகப்பிரியா, ஸ்ரீ.சோபிகா, என்.திருஞானசம்பந்தன், கே.பாலரமேஸ், லு.கஜினி, யோ.ஸ்ரீயோகா,ஸ்ரீ.சோபிகா, த.நட்ராஜன், யே.அனற்றொமனி, சீ.மேனகா, வ.ரேகா, தி.சஞ்ஜீவன், ஆ.ஜெனனி, ஞ.சிவதர்சனி, ப.பகீரதி, யு.கலைச்செல்வி, சி.தூரணி, சி.நிரங்சனா, பு.சுபாசினி.

**எச்.என்.டி.எம்**

க.சுதர்சன்,க.பாமினி, ம.மஸ்கலகா, த.ரேகா, தெ.தூரணி, யோ.சியாமளா, ஊ.ரவீந்திரகுமார், ச.உமாசுதனி, ஸ்ரீ.ரஞ்சிதா, பா.யாழினி, ம.லக்சாயினி, சா.ஸ்ரீசங்கா, அ.சுதாஜினி, ரா.குலரங்சினி, கு.பிரசாந்தி, சு.யோகராஜா, த.சுதாகரன். ப.மேரிஇமால்டா, க.லாவண்யா.

**எச்.என்.டி.பி.எஸ்**

பா.மதியுகன், யு.பகீதரன், நா.சபீதா, ப.லோஜினி, சு.புவனேஸ்வரன், ஸ்ரீ.சத்தியா, நி.கல்ஸ்ரா.

**எச்.என்.டி.ஈ**

வி.நயானா, த.விஜிதா, ப.கரிலதா, பா.நிஜதன்.

(ச)

# பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி ஊடக சுதந்திரத்தை முடக்க இடமளியோம்

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் பயங்காரவாத செயற்பாடுகளில் ஈடுபடுவர்களை இனங்கண்டு அவர்களை கைது செய்து பயங்கரவாத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் கொண்டு வந்த பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு தனது முழுமையான ஆதரவை வழங்கியது. இந்த ஆதரவை பயன்படுத்தி அரசாங்கம் ஊடக சுதந்திரத்தை தொழிலாளர்களின் போராட்டத்தை நசுக்குவதற்கு முயற்சி செய்தால் அதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்கமாட்டோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது;

பயங்கரவாத தடைச் சட்டத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த போது சில அடிப்படைகளை முன் வைத்தே நாம் அதற்கு பூரண ஆதரவை வழங்கினோம். இந்த தடைச் சட்டத்தின் மூலமாக ஊடகவியலாளர்களின் சுதந்திரம், தொழிலாளர்களின் போராட்டம், அரசியல் பழிவாங்கல்கள் மேற்கொள்ளக் கூடாது என்பது எமது கருத்தாகும். அதனடிப்படையிலேயே அரசாங்கத்திற்கு எமது ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

எனினும் பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி ஆங்கில வார இதழின் ஆசிரியரான லசந்த விக்கிரமசிங்கவை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அதற்கான அனுமதியை சட்டமா அதிபரிடம் கோரியிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்த தகவல்கள் உண்மையானால் அரசாங்கத்தின் அந்த செயற்பாட்டை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம்.

அத்துடன் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தை அரசாங்கம் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு மட்டும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆதரவை பயன்படுத்தி அரசாங்கம் ஊடக சுதந்திரத்தை தொழிலாளர்களின் போராட்டத்தை நசுக்குவதற்கு முயற்சி செய்தால் அதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்க மாட்டோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (ச)

# நாடாளுமன்ற பெரும்பான்மையின்றி ஆட்சி செய்யும் மகிந்தவின் அரசாங்கம்

## ஆங்கில நாளேடு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் மகிந்த ராஜபக்ஷ மட்டும்தான் உறுதியான நாடாளுமன்ற பெரும்பான்மை ஆதரவின்றி ஒரு வருடமாக ஆட்சி நடத்தி வரும் என்று கொழும்பு ஆங்கில நாளேடொன்று தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி. அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவு கொடுத்து வருகின்றது. ஆனால் அவர்களுக்கு நன்மை கிட்டும் வரைக்கும் தான் அவர்களின் ஆதரவு தொடரும்.

எனவே மகிந்த ஒரு பெரும்பான்மை அரசை அமைக்க வேண்டுமாக இருந்தால் ஜே.வி.பியை அரசுக்குள் இழுக்க வேண்டும். அல்லது ஐ.தே.கவில் இருந்து 20 நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்வாங்க வேண்டும், இந்த முயற்சிகள் தான் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த இரு முயற்சிகளும் பலன் அளிக்காவிட்டால் எதிர் வரும் வருடம் முற்பகுதியில் நாடாளுமன்றத்தை கலைத்து விட்டு பொதுத் தேர்தலை நடத்துவதுதான் மகிந்தவின் திட்டமாகும்.

வாகரையை கைப்பற்றி விட்டு நாடாளுமன்றத்தை கலைப்பதற்கும் பொதுத் தேர்தலை நடத்துவதற்கும் அரசு எண்ணியுள்ளது. வாகரையை கைப்பற்றுவதன் மூலம் கிழக்கை முழுமையாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும் என்பதுடன் பிரசாரத்திற்கும் அனுகூலமானது என்பது மகிந்த ராஜபக்ஷவின் கருத்து என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# முன்னாள் புலி உறுப்பினர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப்பட்டார். கே.சந்திரசேகரன் (வயது-29) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இவர் கடந்த 10 வருடங்களாக விடுதலைப்புலி உறுப்பினராக இருந்தவர் எனவும் கடந்த நான்கு வருடங்களுக்கு முன் இவர் இயக்கத்தை விட்டு விலகியவர் என்றும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ஏறாவூர் பொலிஸார் இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர் என தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

# வத்தளையில் வானில் குண்டு வெடிப்பு

வத்தளை அல்விஸ் நகரில் நேற்றுக் காலை வான் ஒன்றில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இச்சம்பவத்திற்கு கைக்குண்டே காரணம் என விசேட அதிரடிப்படையின் கட்டளை இடும் அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமல்லிபகே தெரிவித்தார்.

வானில் சாரதி ஆசனத்திற்கு பின்புறமாக பொருத்தப்பட்டிருந்த குண்டே வெடித்ததாக தெரிவிக்கப்பட்டது. இக்குண்டு வெடிப்பின் போது சாரதி படுகாயமடைந்தார். (ச)

# மருத்துவ உதவித் தொகைகள் 2 ஆம் திகதி வழங்கப்படும்

## சமூக சேவைகள் அமைச்சு அறிவிப்பு

யாழ்.குடாநாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வருபவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவித் தொகைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 02 ஆம் திகதி சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு மருத்துவத் தேவைகள் தொடர்பில் உதவித் தொகைகளைப் பெறும் நிலையில் உள்ள குடாநாட்டு மக்களின் நலன் கருதி உதவித் தொகைகளை வழங்கும் இவ் வேலைத் திட்டத்தின் கீழ் இதுவரையில் பதிவு செய்து கொண்டவர்களின் மருத்துவ தேவைகளுக்கு ஏற்ப அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் உதவித் தொகைகள் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச)




ஏ-15 பாதையைத் திறக்கக் கோரி வாகரை மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ப தாதைகளுடன் காணப்படும் ஆர்ப்பாட்டக்காரர்களைப் படங்களில் காணலாம்.

# வடக்குக் கிழக்கு பிரிப்பால் எமது பணிகளுக்குப் பாதிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு இணைப்பை பிரிக்கும் நடவடிக்கைகள் காரணமாக தமது பணிக ளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகப்போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித் துள்ளது.

இதனையடுத்து எதிர்கால நடவடிக்கை கள் குறித்து ஆராய்வதற்காக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு விரைவில் கொழும்பில் கூடவுள்ளதாகக் குழுவின் பதில் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## கண்காணிப்புக் குழு கவலை

ஏற்கனவே போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழு வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கென பொதுவான பணித்திட்டங்களை மேற் கொண்டு வந்தது.

எனினும் வடக்குக் கிழக்கு பிரிப்பதன் பின்னர் இந்தத் திட்டங்களை மேற்கொள்வ தில் பிரச்சினைகள் எழுந்துள்ளது.

இந்த நிலையில் திருகோணமலையில் பணியாற்றிய போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்கள் ஏற்கனவே கொழு ம்புத் தலைமையகத்திற்குத் திரும்பியுள் ளார்கள்.

கிளிநொச்சியில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்றுக் கொழும் புக்குத் திரும்பியுள்ளனர்.

இதனால் வடக்குக் கிழக்குப் பிரதேசங்க ளில் போர்நிறுத்தக் கண்காணிப்புப் பணிக ளில் தடைகள் ஏற்பட்டுள்ளது. (ச-9)

# வைத்தியசாலை பணியாளர் காய்ச்சலினால் உயிரிழப்பு

(பருத்தித்துறை)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் இனந்தெரியாத வைரஸ் காய்ச்சலினால் உயிரிழந்துள்ள தாக யாழ்.வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த திருமதி சந்திரா சிறிஸ்கந்தராஜா (வயது-50) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் சிக்கின்குனியா நோயினால் உயி ரிழந்திருக்கலாம் என சந்தேசிக்கப்படுகின் றது. (எ-52)

# எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பாடசாலைகள் ஆரம்பமாகும்

அடுத்த வருடத்திற்கான முதலாம் தவணை க்கான பாடசாலைகள் எதிர்வரும் செவ்வாய் க்கிழமை பாடசாலை ஆரம்பமாகும் எனகல் வியமைச்சுத் தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட் சை வினாத்தாள்களைத் திருத்தும் நிலையங் களாகச்செயற்படும் 95 பாடசாலைகள் ஜன வரி மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இரண்டாம் திகதி ஆரம்பமாகும் முதலாம் தவணைக் கல்விச் செயற்பாடுகள் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி நிறைவடையும்.

பாடசாலைகளுக்கான இரண்டாம் தவ ணை ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி ஆரம்ப மாகி ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி நிறைவடை யும்.

சிங்கள மற்றும்தமிழ்ப் பாடசாலைகளுக் கான மூன்றாம் தவணை அடுத்தவருடம் செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி நிறைவடையும்.

முஸ்லிம் பாடசாலைகளுக்கு பிறிதொரு கால அட்டவணையையும் கல்வியமைச்சு தயாரித்துள்ளது. (ச-133)

# இராணுவத் தளபதி நேற்று யாழ். விஜயம்



(கொழும்பு)

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜ யம் மேற்கொண்டார். பலாலிவந்த அவர் இராணு வ உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாட லிலும் ஈடுபட்டார்.

யாழ்.குடாநாட்டிலுள்ள பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாகவும் அவர் விரிவாக ஆரா ய்ந்ததாகத் தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

# அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை ஜன.8க்கு முன் சமர்ப்பிக்க முடிபு

(கொழும்பு)

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் வருகைக்கு முன்னர் அதிகாரப் பகிர்வுத் திட்ட வரைபை அனைத் துக் கட்சிக் குழுவின் முன் சமர்ப்பிக்க முடிபு எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு வரவுள்ளார். கடந்த மாதம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித் மகிந்த ராஜபக்ஷ இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரின் வருகை க்கு முன்னர் அதிகாரப் பகிர்வுத் திட்ட வரைபை முன்வைக்கவுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

இரண்டாவது அனைத்துக் கட்சிக் குழுக் கூட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் இரண்டாம் வாரம் நடைபெறவுள்ளது. பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி முன்னைய அனைத்துக் கட்சிக் குழுக் கூட்டங்களைப் புறக்கணித்திருந்தது.எனினும் எதிர்வரும் கூட்டங்களில் பங்கு பற்ற முடிபெடுத்துள்ள தாகத் தெரிவித்துள் ளது. அனைத்துக் கட்சிக் குழுக் கூட்டத்திலிருந்து ஜே.வி.பி. வெளியே றியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# தமிழ் இளைஞன் கைது

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிற்றுண் டிச் சாலையில் பணிபுரிந்து வந்த தமிழ் இளைஞன் கறுவாத்தோட்டப் பொலிஸாரி னால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார். நிரஞ்சன் குமார் (வயது -20) என்ற இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு ள்ளவராவார்.

பல்கலைக்கழகத்திற்குள் ஒருவர் சந்தே கத்திற்கிடமான வகையில் செயற்படுவதாக கிடைத்த தகவலையடுத்து நாம் அங்கு சென்று பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலையில் வேலை செய்த தமிழ் இளைஞர் ஒருவரிடம் விசாரணைகளை நடத்தினோம்.

புதிய விதிகளுக்கு அமைவாகவே இந்த விசாரணைகளை மேற்கொள்கின்றோம். இந்த சந்தேக நபரைத் தடுத்து வைப்பதற் கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் இருந்து பெற்றுள்ளோம். முழு மையான விசாரணைகள் முடிபடையும் வரை வேறு எதனையும் தெரிவிக்க முடியாது என்றார். (ச)

# வெருகல் இந்து...

சம்பவம் இந்து மக்களை அதிர்ச்சிக்குள்ளாக் கியுள்ளது. இந்து மக்களுக்கு வேதனை தரும் இத்துர்ப்பாக்கிய நிகழ்வை நாங்கள் வன்மை யாகக் கண்டிக் கின்றோம்.

அந்தப் பிரதேசத்தில் நமது மக்கள் ஏற் கனவே துயரில் வாழ்கின்றார்கள். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று அவர் களின் உணர்வுகளை மேலும் வருத்தும் நிகழ்வு இது.

இதற்குப் பொறுப்பானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறும் அரச செலவில் ஆலயத்தை மீண்டும் கட்டி புனருத்தாரணம் செய்ய ஒழுங்கு செய்யுமாறும் தங்களை இந் நாட்டு இந்து மக்கள் சார்பாக வேண்டுகின் றோம். (ச)

# சம்பூர் அனல்மின் நிலையத்துக்கான...

திருகோணமலை மாவட்டத்தில் 500 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்வ தற்கான நிலக்கரி அனல் மின்நிலையத்தி னை நிர்மாணிப்பதற்காகவே இலங்கை அரசும் இலங்கை மின்சார சபையும் இணை ந்து இந்திய அரசின் அனுசரணையுடன் இய ங்கிவரும் பிரபல இந்திய மின் கம்பனியான என்.டி.பி.சி. என்ற புரிந்துணர்வு ஒப்பந்தத் தில் கைச்சாத்திட்டனர். இவ் வைபவம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் ஆரம்பிக்கவிருக்கும் இந்த அனல் மின்நிலைய திட்டத்தினை ஆரம்பிப்பதற் கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா வின் என்.டி.பி.சி. கம்பனியின் சார்பில் அதன் தலைவரும் முகாமைத்துவ பணிப்பாளரு மான ரி.சுந்தரலிங்கமும் இலங்கை எரிபொ ருள் அமைச்சின் செயலாளரும் இலங்கை மின்சார சபையின் சார்பில் அதன் தலைவர் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்திய எரிசக்தி அமைச்சின் செயலாளர் ஆர்.வி.சகி உள்ளிட்ட முக்கிய உறுப்பினர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் திருமலை மாவட்டத்தில் எந்த பகுதியில் இந்த மின் பிறப்பாக்க நிலையத் தை அமைப்பது என்பது குறித்து இன்னமும் இணக்கப்பாடு காணப்படவில்லை.

நேற்று செய்யப்பட்ட கூட்டு முயற்சி ஒப் பந்தத்தின் பிரகாரம் மின் பாவனையாளர் இப்போது மின்சாரத்துக்கு கொடுத்து வரும் விலையிலும் பார்க்க குறைந்த பட்சம் இரண் டரைமடங்கு மலிவான விலையில் மின்சாரத் தை பெற்றுக் கொள்ள கூடியதாக இருக்கும். இதனால் இலங்கை மக்களும் இலங்கை பொருளாதாரமும் மிகவும் நன்மை பெறும் என இந்திய எரிசக்தி அமைச்சின் செயலாளர் ஆர்.வி.சகி தெரிவித்தார்.

இதேவேளை இந்த புதிய அனல் மின் நிலையத்தினை சம்பூர் பகுதியில் அமைக்க கூடாது என்று மூதூர் பிரதேச எதிர்க் கட்சி தலை வர் என்.சவுந்தரராஜாவும் அப் பகுதியிலுள்ள பொதுமக்கள் ஒரு சாரரும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இவ் அனல் மின்நிலைய உருவாக்கத்தி னால் வேளாண்மைகள் பாதிக்கப்படுவதுடன் கால்நடைகள் இறக்கும் நிலை ஏற்படுவதும் மனிதர்களுக்கும் தொற்று நோய்கள் ஏற்பட வும் கூடும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் இருந்து மக்கள் வெளி யேற்றப்பட்ட நிலையில் விவசாய வளங்கள் நிறைந்த இப்பகுதியில் இவ் அனல் மின் உரு வாக்கமானது அப்பகுதியிலிருந்து எம்மை வெளியேற்றும் நடவடிக்கையாகவே உள்ளது எனக் கருத வேண்டியுள்ளதாக மக்கள் தெரி வித்துள்ளனர். (ச-133)

# ஏ-15 பாதையைத்...

மாவட்ட அரசாங்க அதிபர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் வாகரைப் பிரதேச செயலா ளர் ஆகியோருக்கும் ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச செஞ்சிலுவைச் சங் கம், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகி யவற்றிற்கும் கையளிக்கப்பட்டது. (ச-133)

# கடத்தப்பட...

அவர் தெரிவித்தார்.

ஆகவே இராணுவத்தினரையே நாங்க ளும் சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளதாக புளொட் அமைப்பின்தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக உடனடியாகவே ஜனாதி பதியிடமும் இராணுவப் பிரிவு மேலதிகாரிக ளிடமும் பொலிஸ்மா அதிபருக்கும் தெரியப் படுத்தியுள்ளதாகவும் அவர்களும்அதற்கான நடவடிக்கை எடுப்பதாக தமக்கு உறுத்தியளி த்ததாகத் தெரிவித்த அவர், நேற்று முன் தினம் கடத்தப்பட்ட தமது உறுப்பினர் இருவ ரையும் சடலமாக மீட்டுள்ளோம் என்றும் தெரிவித்தார்.

இச் சம்பவத்திற்கும் இராணுவத்தினருக் கும் எதுவித தொடர்புமில்லை என இராணு வப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். (ச-133)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.